தினமலர்
சென்னை | புதன் | 10.10.2018

# வாலிபர் உடல் உறுப்பு தானம் நான்கு பேருக்கு மறுவாழ்வு

**சென்னை, அக். 10–**

விபத்தில் படுகாயமடைந்து, மூளைச்சாவு அடைந்த வாலிபரின் உடல் உறுப்புகள் தானம் அளிக்கப்பட்டதால், நான்கு பேருக்கு, மறு வாழ்வு கிடைத்துள்ளது.

சென்னை, பொழிச்சலுார், பிள்ளையார் கோவில் தெருவைச் சேர்ந்தவர், ஸ்ரீராம், 33; தனியார் நிறுவன ஊழியர்.

இவர், செப்., 30ல், இரு சக்கர வாகனத்தில் சென்ற போது, நிலை தடுமாறி விழுந்தார்.

இதில் பலத்த காயம் அடைந்த ஸ்ரீராம், போரூர் ராமச்சந்திரா மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். அங்கு, தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும், மூளைச் சாவு நிலையை அடைந்தார்.

இதையடுத்து, ஸ்ரீராமின் உடல் உறுப்புகளை தானம் அளிக்க, அவரது பெற்றோர் முன்வந்தனர். அவரது கல்லீரல், இதயம், கண்கள் தானமாக பெறப்பட்டன.

இதில், சேலத்தை சேர்ந்த கால்நடை மருத்துவருக்கு, கல்லீரலும்; மேலும் இருவருக்கு, கண்களும் பொருத்தப்பட்டன. இதய வால்வுகள், ராமச்சந்திரா மருத்துவமனையில் பராமரிக்கப்படுகின்றன.

ஸ்ரீராம் உடல் உறுப்புகள் தானத்தால், நான்கு பேருக்கு மறுவாழ்வு கிடைத்துள்ளது.